ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

[illegible]

[illegible]

[illegible]

௩-ம் புத்தகம். } சிதம்பரம்:— சர்வதாரி ஆனிமீ ௧௮ உக்கு ௧௮௮௮ ஜூன்மீ ௩௰ உ சனிக்கிழமை. { இலக்கம்-௧.

[illegible]

[illegible]

[illegible]

ஆரிய சமாஜத்தார் கேள்விககு விடை

விக்கிரகாராதனம் வைதிகமென்பது

ஐயா, ப்ரம்மவித்தியா பத்திராதிபரவர்களே!! இக்காலத்தில் சிலர் வேதங்களிற் சில பாகங்களைக் கற்று அதிலொன்றேனும் முற்றிலுங்கற்றவர்போல் பகட்டி, நமது ஆரியர்களின் குலத்திற்பிறந்து ஆரியபரிக்ஷாமதங்களிற் சிறிதும் பயிற்சியற்றவர்களிடம் பெரிய ஸம்ஸ்கிருத வித்துவான்களாக விளங்கிவருகிறார்கள். அவர்கள் பிரத்தியக்ஷமாய் வேதத்திலெடுத்தோதியதும், ஸ்மிருதி, புராணம், ஆகமம், இதிகாச மிவைகளில் விரிவாய்க் காட்டப்பட்டதும், சர்வ சாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்த நம் முன்னோர்கள் அநுட்டித்து வந்ததுமான விக்கிரகாராதனம் வேதநதியிலில்லையென்றும், பிற்காலத்திலேற்பட்டதென்றும் பலவாறுகச்சொல்லிவருகிறார்கள். ஆதலால் யாமறிந்தமட்டில் விக்கிரகாராதனத்திற்குப் பிரமாணமான வேதவாக்கியமும் மற்றுமநேக இதரப்பிரமாணங்களும் இங்குவெளிப்படுத்தப்படுகின்றன. இனி வேதத்தில் நம்பிக்கையற்றவர்களுக்கு இது ஓர் சாதகமாக மாட்டாதாயினும் இவர் வார்த்தைகளைக்கேட்டுத் தடுமாறும் ஆஸ்திகர்களான நம்மனோர்கள் இதைக்கண்டு களிப்பார்களென்பதே எமது கருத்து. யஜுர் வேதத்திலும் ருக்கு வேதத்திலும் "யஸ்தாவீரஃ [illegible]" என்று ஓர் மந்திரம் படிக்கப்படுகின்றது. இதன்பொருள் முற்காலத்திலவதரித்த மகரிஷிகளாற்றனே வெளியிடப்பட்டிருப்பதைப் பின்வருமாறு காண்க:— "யத்" எக்காரணத்தால் (தொண்டர்களை யனுக்கிரகித்தற்பொருட்டு) "வீரஃ" வீரியமுடையவன் (நரசிம்மதாபினீயவுபநிடதத்தில் "அவனாவீர

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

னெனச் சொல்வது யாங்ஙனம்? என்றவனவி "தபது ஒ மையால் பல்லுலகங்களையும், பல்கோடி தேவர்களையும், பல்லுயிர்களையும் ஒடுக்குவார், உண்டாக்குவார், நிலைநாட்டுவார், ஆதலால் வீரனெனப்படுவார்".) "[illegible]" தர்மநூற்களிற்கூறியபலகர்மங்களை லாராதிக்கத்தக்கவன; "[illegible]" தம்மையாராதிப்பவர்கள் வினைகளுக்குத்தக்க பயனளிப்பவன்; "[illegible]", லீலையை விரும்புவோன் (இவ்வுலகத்தை ஆக்கல், அழித்தல், காத்தல் எனமுத்தொழிலும் முழுமுதற்கடவுளாகிய எம்பிரானுக்கு ஓர் விளையாடல் போன்றதென்றே வேதங்களினுட்கருத்து.) இவ்விதம் பெருமைபெற்ற பரமான்மா "[illegible]" கல்லிற்றோன்றுவாரென்டன. இனி இவ்விஷயத்தைப்பற்றி விரிவாய்வரும்.

(மொழிபெயர்ப்பு) சுந்தரராஜசாஸ்திரிகள்

ப்ரம்மவித்தியாவின் கடிதர்கட்கு.

கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த நண்பர்காள்! நமது ப்ரம்மவித்தியாவானது பிறந்து இரண்டு வருடமாகி மூன்றாம் வருடம் நிகழ்கின்றது. பத்திரிகையின் மகுடத்திற்கேற்க ப்ரம்மவித்தையைப்பற்றி, பத்திரிகாசிரியரேனும், சிறந்தகடிதர்களேனும் யாதுங் கூறினார்களில்லை. வேதங்களின் இரகசியங்களையும், ஆகமங்களின் அந்தரங்கங்களையும், உபநிடதங்களின் உட்பொருள்களையும் தொடர்ச்சியாகவும் விரிவாகவும் எழுதத் தகுந்த அநேகபண்டித சிரோன்மணிகளிருந்தும், வாளாவிருத்தல் அழகல்ல. நமது சமய உண்மைவிளங்காமலே பலர் புறச்சமயங்களில் செல்லுகின்றார்களாதலின், இனியேனும் மறைப்புக்கிடங்கொடாமல் வெளிவருவது புண்ணியமும் அழகுமாம். ஒருவரையொருவர் தவேஷித்து உண்மதச்சண்டையில் தலையிடுதல் கற்றவர்கட்குச் சிறப்பன்று. இக்காலத்தில் ஆங்கிலேயபாஷையைக்கற்ற சிற்சிலர், கடவுளுண்மை விளங்காது நாத்திகம் பேசுவாராயினர். பற்பலர் உண்டோயில்லையோ என்னுஞ் சங்கையுடன் மதுபானத்திலும் ஸ்திரீலீலையிலுமாகக்கெடுகின்றனர். மடாதிபதிகளும், பண்டித ரத்தினங்களும் நமக்கென்னென்று இன்னமும் சும்மாயிருத்தல் நலமல்ல. இதுநிற்க; பத்திரிகாசிரியரவர்கள் இனியேனும் மகுடத்திற்கேற்ற ஆபரணத்தை ஒவ்வோர் பத்திரிகையிலுமிட்டு, பலரையும் ஆனந்திக்கச்செய்வாரென்று நம்புகின்றனம். சுபமஸ்து.

ஆண்டானடிமை.

ப்ரம்மவித்தியா

சிதம்பரம்

சர்வதாரி௵ ஆனிமீ [illegible]

ஐயா, நம் பத்திரிகையைப்படிக்கும் நண்பர்களனைவரும் நமதுபத்திரிகைக்கு இப்பொழுது நடப்பது மூன்றாவது வயசென்று அறிந்திருப்பார்களே. இதுகாறும் இப்பத்திரிகையிலனேக

[illegible]

[illegible]

[illegible]

ம் பண்டிதர்கள் பற்பல விஷயங்களைப்பற்றி எழுதியுமிருக்கிறார்கள்; எழுதவுமிருக்கின்றார்கள். மாதமொருமுறை நம்பத்திரிகை மூன் சுழன்றுவந்தது. இனி, மாதமிருமுறையாதலால் நமதுகையெய்ப்ப நண்பர்களுக்கும் திருப நேயர்களுக்கும் இஃதோர் பெருமகிழ்ச்சியை விளைவிக்குமென்பதிற் றடையில்லை. இப்பத்திரிகை விர்த்திபடையவும் நாஸ்திகம் கிறிஸ்தவ மலக்த இக்காலத்தில் மேன்மைதாங்கிய நமதாரியமதத்தை முன்னுக்குக்கொண்டுவரவும், உசிதமாய் அனாரியமதத்தை நிராகரணஞ்செய்யவும், பெரியோர்களின் சரித்திரத்தை எடுத்துக் காட்டவும், சுருதி புராணம், ஆகமம் இவை முதலியவற்றின் இரகசியங்களை எடுத்து விரித்துக்காட்டவும் அவ்விதம் நம்பண்டிதர்கள் விவாதங்களிற் செலுத்தும் நுண்ணறிவை வெளியிடவும் எம்மால் கூடியமட்டு முயன்று வந்ததும் நம் திருப நேயர் அதற்கு அநேகமாய் சாதகமாய் நின்றதும் எல்லோரும் அறிந்திருக்கலாம். இங்ஙனமிருக்க, நம்பத்திரிகா நண்பர்களின் மதவிச்சுவாசம் பெருக்கம் இவைகளையெல்லாம் மறைத்து விசேஷமாய் மீண்டுமெழுத நம்பத்திரிகா நேயர்களைத் தூண்டுகின்றது. நம்மதத்தின் பெருமையை யறிந்த பெரியோர்களுக்கு நமெழுதியது அவ்விஷயத்தில் மிகக் குறைந்ததாகத் தோற்றமென்பது உசிதமே. அதற்குக் காரணம், விஷயமோ அதிகம்; பத்திரிகையோ குறைந்ததென்பதே. இனி மாதமிருமுறை வெளியாகுமிப்பத்திரிகை அவர்கள் கருத்தைச்சிறிது நிறைவேற்றுமென்றே கருதுகிறோம். யாம் ஆசிரியர் முதலாகவுற்ற பலவரிய விஷயங்களை வெளியிடக் கருவியாகக்கொண்ட இப்பத்திரிகையை பற்பலபண்டிதர்கள் ஆதரித்துவருவது எமது பாக்கியமே. அப்பண்டிதர்களும், அநேகசுதேச கனவான்களும் இப்பத்திரிகையைப் போஷித்து வருகின்றார்கள். இனி நமது பத்திரிகை இத்தேசத்துப் பண்டிதர்களனேகர் கொண்டாடப் பதம் பெற்று, தனது மூன்றாவதுவயதைப் பெருமையுடன்பெற பரமேசுவரனது திருவருளை எதிர்பார்க்கிறோம்.

ஆரியர்களுக்கோர் விண்ணப்பம்

ஐயா, சிறிது செவிசாய்த்து எமது சிறுவிண்ணப்பத்தினை யேற்று உசிதமானபடி நடந்து கொள்வீர்களென எதிர்பார்க்கிறோம். யாம் எமது பத்திரிகையில் பன்முறை நம்மவருக்கு இக்காலம் வேண்டிய அவசியமான விஷயங்களைப்பற்றி எழுதி இறகு முனைமழுங்க வரைந்து வருவதை அறியாதவர் யாவர்? நம்தேசத்து ராஜரீகச் சீர்திருத்தத்தை நாடி, பொ[illegible] த்தை விரும்பி நமது மேன்மைதாங்கிய ஆரி[illegible] ஷயங்களைப் பற்றிச் சிறிதுங்கவனியாது நின்ற[illegible] ராதிபர்களும் சிலவருடகாலத்திற்குள் நம்ம[illegible] ரியம் இன்றியமையாதென வெண்ணி[illegible] ளில் அதுவிஷயங்களைப் பற்றிப் பலவிதமாய்[illegible] ள். நம்மவர்களும், மற்றைய சேம்றி[illegible] குகூடிச்சம்பாஷிக்கும் வேளைகளில்[illegible] தவிஷயமான போதனைகள் (Mora[illegible]

[illegible]

-ions.) அத்தியாவசிகமெனக்கருதி அதுவிஷயமான அபிப்பிராயங்களைப்பற்பல விதமாக ஆங்காங்கு வெளியிட்டு வருகிறார்கள். இவ்விஷயத்தைப்பற்றி சொல்மாத்திரையில் சில ஏற்பாடுகள் நடந்து வருகின்றதேயொழிய, யாம்பிரத்தியக்ஷமாயறியக்கூடியமுயற்சிகள் இதுகாறும் செய்யப்படவில்லை. பாருங்கள்! நம்ஜாதிமதாசாரங்களுக்கு நேர் விரோதிகளும் எவ்விதத்தாலும்நம்மவரைக் கிறிஸ்தவராக்க முயலுந்தன்மையுள்ளவரும் தமது நுண்ணறிவுக்கேற்ப விடாமுயற்சி கொண்டவரும், அத்தேசத்தவருள் ஆரியமதத்தவரைத் தம்மதத்திற்சேர்த்து பெரும்புகழையும் பெரும் திரவியத் தொகையையும் பெற விரும்பி திரைகடல்கடந்து கபடமார்க்கங்களைக் கைக்கொண்டு நற்குணங்களாலவைகளை மூடிப் பற்பல வுபாயங்களால் எங்கும் புகுந்து மிகுந்த திரவியத்தைச் செலவிட்டு பற்பல கட்டடங்களைக்கட்டி, வித்தியாப்பியாசமெனும் வழியால் ஆரியர்களைக் கிறிஸ்தவராக்கல் நன்றெனக் கருதி, அவ்விதப்பாடசாலைகளை அநேகம் தாபித்து, அப்பாடசாலைகளில் அவர் விவிலிய நூலை அவசியம் பயிலவேண்டுமென்று கட்டாயப்படுத்தி, நம்மதங்களைப்பலவாறாகத் தூஷித்து ஆரியமதத்தின் இரகசியங்களைச் சிறிதுமறியாத பால்வாய்ப்பாலகர்களைப்பகட்டி புன்மதச்சிறவித்தை அவர் புத்தியிலூன்றி, கருணையைக்கனாகண்டவர்போல் வேடம்பூண்டு ஆரியசிம்மங்கள் வசிக்கின்ற இத்தேசத்திலும்சமீபகாலத்திற்குள் பலரைத்தம்மதத்தில் சேர்த்துக்கொண்டார்கள். ஆரியர்களே! நல்வழியிற்பிறந்தவர்களே! மகரிஷிவம்சத்தின்பேரணிகளே! எல்லாவற்றிலுஞ் சிறந்தவர்களே! சிறிதுகாலங்கொடுமையைக்கவனியுங்கள். நம்மவர்கள் தங்களது சரீரசுகத்தைச் சற்றேனுங்கவனியாது பற்பலவழிகளில் பணத்தைத்தேடி இம்மையிலும் மறுமையிலும் தங்களுக்குச்சுகங்கிடைக்குமெனக்கருதிப்பிள்ளைகளை வளர்க்கிறார்கள். அவர்கள்திருமேனியிற் சிறிது குடுமியின், பெற்றோர்படும்பாட்டைக்கேட்டீர்களோ? நமது ஆலயங்களில் பரமேச்வர பிம்பங்களையும் தம்பெற்றோர்களையும் வணங்கும்பொழுது அக்குழந்தைகள் வணக்கில், அதன்பொருட்டே அவர் திருமேனி வாடிவிடுமோவெனவிசனிக்கிறார்கள். அவர்களுக்கு நமதுவேதவித்தையைக்கற்பித்தலால், சிறிதும் சிரமமுண்டாவதில்லை. நமதுதரித்திரத்தால் பணப்பேராசை பெருகி இளமையிற்றானே ஆங்கிலேயபள்ளிக்கு அனுப்புகிறார். இவ்விஷயமொன்றுமட்டில் இனித் தடுக்கமுடியாதென்பது திண்ணம். இக்காலத்தில் இராச்சியபாரம்யாதொரு எதிரியில்லாமல் ஆங்கிலேயர் வசப்பட்டிருக்கிறது. அரசர்கள் பாஷையாகிய ஆங்கிலேயபாஷை தற்காலம் நம்மவர்க்கு இன்றியமையாது. நம்தேசம் அநேக கடுமையான வரிகளால் வருந்தி, வறுமைக்கிடமாய் ஐசுவரியமென்கிற வார்த்தையேனும் கிடைப்ப தரிதாயிருக்கின்றது. கைத்தொழில்முதலியனவு முற்றிலுங் குன்றியன. ஜனங்களுக்குப் படிப்பாலுண்டாகும் பிழைப்பே சிறிதுயிருப்பதால் அவ்விஷயத்தில் பேராசைகொண்டு முயன்றுவருகிறார்கள். ஆயினும், எம்மால்சகிக்கக்கூடாத துயரமொன்று சம்பவித்திருக்கின்றது. அஃதாவது:— இப்பூமண்டலத்தில் சர்வவித சுகங்களுக்கும் இடமான இப்பரதகண்டத்தின்கண் பிறந்து, மேற்றிசையாரும் ஏனைய எத்திசையாரும் எக்காலத்தும் புகழப்படப்பெற்ற மேன்மையாக்களாகிய மகரிஷிகளின் குலவழி பெற்றவருமான சமூகத்தைக

[illegible] (Father) [illegible]

ள், ஓர்பணப் பேராசையாலும், படிப்பின் விருப்பத்தாலும் பாதிரிபள்ளிக்கு ஏகுகிறார்கள். அந்தோ!! அங்குநடக்கும் அநீதத்தைபற்றி யாதுரைப்போம்; நிர்ப்பந்தத்தாற்றானோ? அல்லது நித்திய கிருத்தியமென்றெண்ணியோ? அல்லது எக்காரணத்தாற்றானோ அங்ஙனஞ்செய்கிறார்களோ அறியேம். அப்பாடசாலைகளில் புகுந்தவுடன் மேற்றிசைபோதகர்கள் தான்முன்னின்ற மிருகத்தன்மையைச் சிறிதுங்கவனியாது, எமதுமதங்களின்வரை மீறித்தூஷிக்கின்றார்கள். இவ்விதவிலக்கண முடையவனென அறியப்படாத ஓர் தேவனை ஏதேதோபிரார்த்திக்கிறார்கள். பிறகு ராஜத்துரோகம் தெய்வத்துரோகம் என்னுங்குற்றத்திற்காகமரண தண்டனையுண்டு மாண்ட ஓர் மனிதனை வீணில் கிறிஸ்தவனெனப்பெயரிட்டு, அவர் ஏதோ உலகரக்ஷகனெனவும், இன்னுமேதேதோ செய்தானெனவும், சண்டைத எல்லாம்சொல்லி தகப்பன் பெயரறியாத அதர்மாத்துமாவை நம்பும்படியுபதேசிக்கின்றார்கள். இவ்விதக் கொடுமைகளையெல்லாம் கண்ணாக்கண்டும் காதாரக்கேட்டும், கைகட்டிநின்று பகற்காலத்தில வெளிவந்த கோட்டான்களைப்போற் சிறிதுந்தமது ஆரியத்தன்மையை புணராது ஒருவர்முகத்தை மற்றொருவர்பார்த்துக்கொண்டு, இவ் வவமானத்தைச் சிலர் அறிந்தும் அறியாதவர்போலிருந்து இவ்வேதாந்தவுபதேசத்தைக் கவனிக்கிறார்கள். ஐயோ! இப்பாதகர்கையிலகப்பட்டு நமதரியப்பொம்மை ஆடுங்காலங்கிட்டியதே! ஐயா, பிரத்தியக்ஷமாயிவர்களைப்பெற்ற தாய் தந்தைகளிருக்க, மற்றவனைத்தகப்பனென்றழைப்பது பெற்றோர்களுக்குமனத்துயரத்தை விளைவிக்காதோ? நம்பிள்ளைகள் ஆங்கிலேயபாஷையில் (Father) என்னுஞ்சொல், தமிழில் பாதிரி என்றறிய, அதைக்கொண்டல்லவோ அவர்களை அவ்விதம் கூப்பிடுகிறார்கள். அப்பாடசாலைகளில் முதல்மணியில்நடக்கும் இம்மகாவைதிககாரியத்திற்கு செல்லவேண்டியது அவசியமென்றெண்ணி நம்குலதெய்வத்தைவழிபடுதல், நமது அநுட்டானங்களைச்செய்தல் முதலியவற்றைவிலக்கி, அவைகளைச்செய்யும்படி போதிக்கும் பெற்றோர்களை அவர்கள் "இஃதென்ன பழயவழக்கம், நாகரீகமில்லாதகாலத்தில் ஏற்பட்டதல்லவோ" என்றுபரிகசிக்க, அதையும் ஆன்றோர் சகிக்கின்றார்களே! சிலரோ! நம்மதத்தைத் துலைத்து அவர்மதத்தில் பிரவேசிக்கின்றார்கள். மற்றுஞ்சிலர்பெற்றோர்நல்வழியைக்காட்டி, அவ்வழி நடக்க இவர்களை வற்புறுத்தின் "இத்தகைமையான நிர்ப்பந்தஞ்செய்தால் உடனே கிறிஸ்தவமதத்திற்சேருவோம" என்று கடுமையாய் விடையளிக்கின்றார்கள். இனி இவர்களை மணம்புரிந்தபெண்கள் படுந்துயரத்தைப் பற்றி எம்மால் சொல்ல நாவெழும்புமோ? இவ்விதம் நற்குழந்தைகள் நமக்குபயோகப்படாதென்றெண்ணியாபெற்றோர்கள் இத்தகைமையான உழைப்பை எடுத்துக்கொண்டார்கள்? உலகத்தில் மற்றவர்மதத்திற் புகுந்த பிள்ளைகளால் இம்மைக்கு ஏதுஞ் சுகமுண்டா? இவர்களின் புதல்வர்கள் "ஏனையமதத்திற் சேர்ந்தார்" என்னுமலகவார்த்தையைக் கேட்டும் பெற்றோர்களுள்ளம் எப்பாடுபடுமென்பதை அறியவில்லையோ? மேற்றிசையார் படுகுழியில் விழுந்த மங்கையர்கள் மீண்டும் இப்புன்மதப்படுகுழியைவிட்டு நம்மதக்கரையேற யேதும் வழியில்லையே! யென்று பலவாறுகப் படுந்

[illegible] (Romon Cathalics) [illegible]

துயரம் இம்மட்டென் றெம்மா லெடுத்துரைக்கவும்படுமோ? இவர்களால் அவர்களுக்கு மறுமையிற் சுகமுண்டென்றும் நம்பலாமோ? ஐயா, புண்பட்ட வுடலில் உவர்நீரிறைப்பதுபோல், இப்பிள்ளைகளைப் பெற்றுவளர்த்து படாதபாடுபட்டுப் பாதிரிப்பள்ளிக்கனுப்பி அவர் பரமதஞ்செல்ல, ஆராத் துயர்மையடைந்திருக்கும் அப்பெற்றோர்களை, அஞ்ஞானிகளே என்றவிளித்து இக் குழந்தைகளே எதிர் நிற்கிறார்கள். 'இமட்டோ! உம்மத்தை மலருக்குக் கனகமென்று பெயரிட்டது போலும் செவ்வாய்க்கிழமையை மங்களவாரமென்றழைத்ததுபோலும் இவர்களை ஞானிகளென சில நீசர்களழைக்கிறார்கள். சன்னடதேசமுதலிய சிலதேசங்களில் உயர்குலத்திற் பிறந்தோரும், மெய்ச்சமயமாறாயாது இத்துரோகிகளைச் சர்வேசுவர மதத்தவரெனக் கூறுகின்றார்கள். தென்னாட்டின் கேடடையோ தெரியவைக்க எம்மால் முடியாது. அந்தேசத்து ஜனங்கள் இதை வேதமதமெனவு முரைக்கின்றார்கள். ஒருவன் நம்மதத்தை விட்டு கிறிஸ்துவ மதத்திற் புகுந்தால், ஐயோ! என்செய்வோம்; நம்மவர்களுக்கு நாணமில்லையோ? இவர்களை சிறிதும ஆலோசியாது "அவன் வேதத்திற் சேர்ந்தா" ரென்கிறார்கள், ஓ அறிஞர்களே! இனி செய்வதியாது? மேற்றிசையார் செய்கையைப் புகழ்வோமா? நம்மவர் மடமையை இகழ்வோமா? நங்குழந்தைகளின் தாழ்ச்சியைக் கண்டு துயர் வுறுவோமா? நம் மதத்தின் நிலைமையைப் பற்றி மனவருத்தமடைவோமா? நம் தேசக்ஷேமக் குறைவைக் குறித்துத் திகைப்போமா? மேன்மை தாங்கிய நமது நூல்கள் குன்றியதைப் பற்றி வாடுவோமா? இவ்வளவு விபரீதமாகுமென நம்முன்னோர்கள் எண்ணினார்களில்லையே? இதன்பயன் இவ்வளவு கொடுமையுளதேல் இதில் அவர் முயல்வாரோ? கேட்டிற்குக் காரணமான இக் கல்விப்பிச்சை யெடுத்தேனும் பிள்ளைகளுக்குக் கற்பிப்பாரோ? இனி வீட்டிற்கிளிபோன்ற கன்னிகளை அவர்களுக்கு மணம்புரிவிப்பரோ? படாதபாடுபட்டு இவரை ஆதரிப்பாரோ? இவ்வளவும் பண ஆசையின் பொருட்டென்றே சொல்லப்பாலதாமோ? வேறுமதத்திற் புகுந்தவர்கள் தம் தந்தையர்களுக்குத் தனத்தாலேனும் தனுவாலேனும் உதவுவார்களோ? இனி அவர்கள் கிறிஸ்து மதத்தை அடைந்தவர்கள், அம்மதத்திற்குரிய (Jehovah) ஜிஹோவா என்னுந்தேவதை "தாய்தந்தைகளை விட்டுத் தன்மனைவியுடன் சுகித்திருப்பார்" என்று சங்கற்பித்த சங்கற்பத்தை அவர் பின்பற்ற வேண்டியது அவசியமல்லவோ? நம்மவர்களே! நமதநாதரவின் பயனை யனுபவித்தோம்; இனியேனும் நித்திரையைத் துறவுங்கள்; உசிதமான ஏற்பாடுகளைக் கைக்கொள்ளுங்கள்; ஆங்காங்கு தகுந்த பாடசாலைகளை நியமியுங்கள்; ஆங்கிலேயபாஷையைக் கற்றுணர்ந்த நம்மனோர்களையே யதற்கு அதிபதியாக்குங்கள்; இக்காலத்திலோ! மேற்றிசையாரிலும் நம்மவர்கள் மிகச் சிறந்தபயிற்சியை யடைந்திருக்கிறார்கள். M-A எம்-ஏ முதலிய பல பட்டங்களை வகித்திருக்கிறார்கள்; இனி நாமெல்லோருக்கு சேர்ந்து மடாதிபதிகளை விழிக்கச்செய்யவேணும்; பாருங்கள்; மேற்றிசையில் கத்தோலிக் கிறிஸ்தவர்கள் (Roman Catholis) சந்நியாசிகள் இத்தேசத்தினுட் புகுந்து மத பாடசாலைகளை ஏற்படுத்தி நம்மவர்களை க்கிறிஸ்தவர்களாக்கிவருகிறார்கள். நம்தேசத்தில் சந்நியாசிகளானமடாதிபதிகள் மதம், கல்வி, ஆசாரம், பொதுதன்மை இ

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வைகளைச் சற்றேனுங் கவனிப்பதில்லை. சிலர் ஒருவர்க்கொருவர் சண்டைசெய்து வீணில் திரவியத்தை விரயமாக்குகிறார்கள். சிலர் வழங்கக்கூடாத காரியங்களில் பணத்தைப் பாழாக்குகிறார்கள். அவரது திருவுளம் தங் கையிற் சிக்கிய பொருள்களை எவ்விதம் செய்யலாமென்று பேராசைபெற்றிருக்கின்றது. இதுவிஷயத்தில் ஆங்காங்கு கூடிய மஹஸர்வாயிலாக மடங்களைச்சீர்திருத்தல் வேண்டும். அநுசிதமானகாரியங்களைச் செய்பவர் தத்தம்மடங்களுக்கு அருகரல்லரென்று விரிவாய்த்தர்மபுரத்தைச்சேர்ந்த வியாச்சயத்தில தீர்மானமாயிருக்கிறதல்லவா? இனி தத்தமக்குரியதொழிலைச் செய்யாவிடில், குருவாயினும் காரியாகாரியமறியாராயின் அவரைச்சீர்திருத்துவது மாணுக்கருடைய கருமமென ஸ்ரீஇராமாயணவசனத்தை இங்கு கைக்கொள்க. யாமீண்டுமறைகில், ஒருவரோனுமாரியராய் யாம் விழிக்குங்கால்இருக்கமாட்டார். இனி அவர்கள் குருக்களென யாம் வீணில்வழிபடின், பைத்தியங்கொண்டபதியை மதிபோனவழிவிட்ட மங்கையின் கதியே என்றறிக. ஆபத்காலங்களில்கம் மதங்களை யாதரிக்க வேறுயாருளர்? அறிஞர்களே! கூர்ங்கள்; பேற்றிசையார் டள்ளியில் பிள்ளைகளையனுப்பாதீர்கள்; நீங்கள்வாய்மை ஆரியராயிருந்து உங்களுக்கு ஆரிய ஜாதிமதவிச்வாசம் உளதேல், இனி ஒருக்காலும் பாதிரி டள்ளிக்கு பெண்களை அனுப்பாதீர்கள்! அனுப்பாதீர்கள்!! அனுப்பாதீர்கள்!!! அதினால் விளையுந்துன்பங்கள் அநந்தம்; பணப்பேராசையை ஒழியுங்கள்; நம்பாடசாலைகளிலேனும், அல்லது கவர்ண்மெண்டு பாடசாலைகளிலேனு அனுப்புங்கள்; வெள்ளைவர்ணத்தைக் கண்டு மயக்கங்கொள்ளாதீர்கள்; நேற்றுக்கூடிய நாஷனல் காங்கிரஸ் மகாசபையில் ம-ா-ா-ஸ்ரீ சுரேந்திரநாதபநர்ஜி முதலிய நம்மவர்களுடைய இனிய உபந்நியாசங்களைச் செவியாரக் கேட்டவர்கள் ஆங்கிலேயபாஷாப்பயிற்சியில் ஐயமுறுவார்கள்; நிற்க; இனியேனும் ஊக்கங்கொள்ளுங்கள்; நமக்குப் பரமேசுவரன் வழிகாட்டுவாராக.

ஸம்ஸ்கிருத பாஷை

இராமாயணம்

(முன்தொடர்பு)

ஐயா, இதுகாறும் யாம் ஸ்ரீமத் இராமாயணத்தைப் பற்றிச் சில வரைந்தோமல்லவா? தற்காலம் சிலர், இவ்விராமாயணத்தில் பூகோளத்தைப் பற்றிச் சொல்லிய விஷயங்களில் சிலது தாறுமாறாயிருப்பதாக எண்ணுகிறார்கள். அதன் முதலாவது:— ஸ்ரீராமன் கோதாவரி தீரத்தில் பஞ்சவடியில் வசிக்குந்தருணத்தில் இராமனது பாரியை இராவணன் அபகரித்தானென்றும், பிறகு ஜடாயு என்னும் பக்ஷியின் மொழியால் அவ்விராவணன் தென்றிசையை நோக்கிச் சென்றதாயறிந்து தானுமத்திசையை நோக்கிச் சென்று, அங்கு பம்பை என்னுமோர் தடாகத்தினருகில் ரிசியமூகபர்வதத்தில் சுக்ரீவனோடு சகந்து சீதையைத்தேட பலவிடங்களில் வானரங்களை அனுப்பினுனென்றும், அதில் தென்றிசைநோக்கிச்சென்ற அநுமானுமு

[illegible]

[illegible]

[illegible]

தலிய வானரங்கள் சுக்ரீவ னுரைத்தபடி விந்தியமலைத் தொடரை யடைந்தாரென்று கதை எழுதப்பட்டிருக்கின்றது. இஃதியாங்ஙனமொவ்வும்? நர்மதை, கோதாவரி முதலிய ஆறுகளைக் கடந்து துங்கபத்திரையின் கரையிலுள்ள ரிசியமூகத்திலவசித்துத் தெற்கே போகும்படி அநுமானுக் குத்தரவு செய்தால், அவர் வடகாடுகளுக்குச் சென்றாரென்பதாவது இனி துங்கைபத்திரை, பம்பை இவற்றிற்குத் தெற்கு விந்திய மென்றாவது சொல்லற்பாலதோ,, என்பது. அதற்கு இவ்விதம் பரிகாரம்:—

"யான் ஒருகாரணத்திற்காக உலகமுழுவதுஞ்சுற்றினேன்,, என்றுதானே ரிலுரைத்தபடி அக்காலத்திலிருந்த பூகோளத்தினிருப்பை சுக்ரீவனறிந்தவனே. ஆதலாற்றான் அவன் நான்குதிக்குகளையுஞ் சுற்றிச் சொல்லுமிடத்து ஏனையடையாளங்களைச்சொல்லியபடி அர்த்தவாதமாய்சப்த தீபங்களையும் எடுத்துரைத்தானில்லை. இனி அவன் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு எனத் திசைகளைக் குறித்தது தன் இருப்பிடத்தை நோக்கியல்ல; சந்து நதியை நோக்கியே என்றறிக. ஆகையினாலேயே விந்தியபருவதம், கோதாவரி, கிருஷ்ணை இவைகளையும் தென்றிசையிலேயே சேர்த்திருக்கிறார். இனி உலகமெல்லாஞ்சுற்றியறிந்தவன் அதிசமீபத்தி லுள்ள கோதாவரி, கிருஷ்ணை, இவைகளின் இருப்பையுமறியானென்பது உசிதமோ? அதுகொண்டே கங்கை, யமுனை, இவைகளைக்கீழ்த்திசையிற்கணக்கிட்டமையுமறிக. கல்வியிலுள்ள அறிபாது அவருக்கு அஞ்ஞானத்தை யமைக்கும் புல்லறிவாளர் கூற்று பயன்படாது. அக்காலத்துப் பூகோளத்தின் ஏற்பாட்டைப்பற்றியும், இக்காலத்தில் மற்றவர் கண்ட பூகோளத்தைப்பற்றியும் பிறகு சிறிது எழுதப்புகுவாம்.

விக்கிரகாராதனம்

இவ்விஷயத்தைப் பற்றி ப்ராம்மஸ்ரீ சுந்தர ராஜசாஸ்திரிகளவர்கள் முன்னொருவாறு வெகுபுகதிகளோடு வரைந்திருக்கிறார்கள். இப்பொழுது ஆரிய சமாஜத்தவர் கேள்விக்கு விடைபகற எமது வேண்டுகோளுக்கிணங்கி மீண்டு ஓர் உபந்நியாசத்தை எழுதியுமிருக்கிறார்கள். உபநிடதங்களில் விக்கிரகாராதனையை விதிக்கும் வசனங்கள் பலவுள. அவைகளை எடுத்துத்தீட்டிக்காட்டாது நீக்கியதற்குக்காரணம் யாதெனின், தற்காலத்தவருட்சிலர் வேததத்திலேதோ அபிமானம் பூண்டவர் போற்காட்டி அவ்வபிமானத்தை எங்குஞ்செலுத்தாது உபநிடதங்களினின்றகற்றி சாதாரணமாய் எல்லோரும்படித் தவரும் ருக்குவேதமுதலிய வேதங்களிற்றானே ஒடுக்கிக் கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு அதினின்றேயெடுத்துப் பிரமாணத்தைக் காட்டவேண்டுமென்பது அவர்களுட்கருத்து. இனி மேன் மேலும் அநேகப் பிரமாண வசனங்களைக்கொண்டு இவ் விஷயத்தை நிலைநாட்டி நமது சாஸ்திரிகளவர்கள் விடாயல் உபதிபாகப்டேசிவருவாரென நம்புகிறோம்.

[illegible]

பத்ரிகா:

[illegible]

விஷ்ணுவித்யா

[illegible]

[illegible]

[illegible]

இனி அநேக வசனங்கள் உபநிடதங்களிற் காணப்படுகின்றன. இவர் எடுத்தோதிய வசனமும், ருக்வேதம் -அ- வது அஷ்டகத்திலும் யஜுர்வேதம் நான்காவது காண்டத்திலும் காணலாம். ஆரிய சமாஜத்தவர் வெளியிட்டது வாய்மையாயின், அவர்கள் பிரதிக்ஞை செய்தபடி நமது சாஸ்திரிகளவர்களுக்குப் பரிசு அளிக்க வேண்டும். பத்திராதிபர்களே! நீங்களெல்லோரும் தத்தம்பத்திரிகையில் இவ்விஷயத்தை வெளியிடுவீர்களெனப் பிரார்த்திக்கிறோம். "சுதேசமித்திரன்" பத்திராதிபரும் இஃதை அவசியம் வெளிப்பாரென எண்ணுகிறோம்.

(கடிதங்கள்)

கடிதர்கள் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் பாத்தியரல்லர்.

விஷ்ணு வித்தியா

ஐயா, ப்ரம்மவித்தியா பத்திராதிபரவர்களே!! யான் எழுதப்புகுந்த இவ்விஷயத்தைத் தமது மேன்மை தங்கிய பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரம் பண்ணுவீர்களென எதிர்பார்க்கிறேன். அநேக அரியவிஷயங்களுடன் கூடிய தமது பத்திரிகை இருமுறை வெளிவரப்போகிறதாக தாம் வெளியிட்டபடி தம் பத்திரிகாபிமானிகளின் பேருதவியால் நடந்தேறுமென நம்புகிறேன். தொடங்கிய விஷயத்தைப் பற்றி இங்கு விசாரிப்பாம். ப்ரம்மவித்தியா பத்திரிகையைப் படிக்கும் பண்டித மணிகளே!! சிறிது செவிசாய்மின்; முன்னோர்களும் விசாரித்துத் தீராத சைவ வைணவ விவாதங்களில் எம்போலியர் தலையிட்டுக்கொள்வது மிக அசாத்தியமான விஷயமே. ஆயினும், "ஸ்ரீ ஸத்வித்தையை" எழுதிய பண்டிதர் ஸ்ரீ இராமாயணத்திற்கு எடுத்துரைத்த குறையையும், விஷ்ணு அவதாரமான ஸ்ரீ இராமனைச் சிவாவதாரமென்றெழுதியதையுங்கண்டு விஷ்ணுவித்தையெனப் பெயரிட்டு ஓர் பத்திரிகையை வரைந்தேனேயன்றி சிவத்வேஷத்தாலல்ல. இவ்விஷயத்தில் நடுவுநிலைமையுடைய பண்டித மணிகளாகிய பத்திராதிபரவர்களும் "பத்திரிகையைப் படிப்பவர்களே" என்று துவக்கி எனது உபந்யாசத்தைச் சற்று மறுத்தெழுதியிருக்கிறார். யாம் முதலில் எழுதியதாலும், எமது வேண்டுகோளாலும், விஷ்ணுவித்தை என்னும் பத்திரிகை வெளியிடப்பட்டதாகவும், யாமெழுதிய விஷயங்கள் வைதிகர்களுக்கு அசம்மதமென்றும் எழுதியிருக்கிறார். பண்டிதமணிகளே! எனது சிறு விண்ணப்பத்தைச் சற்று உற்றுநோக்கவேண்டும். ஸத்வித்தையை எழுதினவர் ஸ்ரீ ராமன் விஷ்ணு அவதாரமென்பதற்கு சரித்திரப்பிரமாணமில்லையென்று, ஸ்ரீமத் இராமாயணம் மூலப்பிரமாணத்தை அநுசரியாது முன்வந்ததென்றும், சீதாநாதன் திருநீறணிந்தானென்றும் கூறியிருக்கிறார். அதைக்கண்டு யாம் இராமாயணமுக்கியப்பிரமாணமென்றும், இராமன் விஷ்ணு அவதாரமென்றும், தரிப்பது ஊர்த்துவபுண்டரமென்றும் எமது ஆசாரியமுக

[illegible]

...க்கே ட்டபடி எழுதி "விஷ்ணுவித்தை" என மகுடஞ்சூட்டி ஓர் பத்திரிகை அனுப்பினேன். இனி, பத்திராதிபாவர்கட்கு அது அசம்மதமாயின், அதன் விஷயத்தைபல்லவோ மறுக்கவேண்டும். அங்ஙனமில்லாது வேறு பற்பல காரணங்களை வெளியிட்டதென்னை? இனி நடுவுநிலைமையுள்ள பத்திராதிபர் விசாரிப்பது கடமையாயின், முன் எழுதிய சத்வித்தையைப் பற்றி இவ்வாறே எழுதியிருக்கவேண்டுமல்லவா? அங்ஙனமில்லாமையால் இவர்கள் சைவச்சார்பினரென்றே கொள்ளவேண்டும். அங்ஙனமாயின் நம்மவர் மதத்தின் பொதுதன்மை எவ்விதம் நிலைபெறும்? அவைதிக மதங்களையொழித்தல் எவ்வாறமையும்? நமது உட்சண்டைகளாலேயே இருக்கின்றகாலம் கழிகின்றதே! வாசுதேவோபநிடதத்தில் நாராயணனுக்கு ஊர்த்துவ புண்டரம் விதித்திருப்பதாகயாமெழுதியதற்கு, அவருக்கு நேரோ ஊர்த்துவ புண்டரத்தை விதிக்கும் வசனம் உபநிடதத்திலில்லையென பத்திராதிபர் வெளியிட்டார். அதுநிற்க; ஸ்ரீராமன் யாவரின் அவதாரமென இங்கு விசாரிப்பாம். முத்திகோபநிடதத்தில் "ஓ அநுமந்தா! எப்பாடுஞ் செய்தவனாயினும் என் நாமத்தை ஜபிப்பானாகில் நற்கதியடைவான்" என்றும், விஷ்ணுவாகிய எனது உயிர்த்தலை சர்வவேதங்கள்; எனது தாரகமந்திரமே மகேச்வரன் காசியில் பிராணிகளின் வலது காதுகளிலுபதேசிப்பது,, என்றிப்பதால் இராமன் விஷ்ணு அவதாரமென்றும், அவனைவழிபடுவோர் வீடு பெறுவாரென்றும் சித்திக்கவில்லையா? இனி இராமதாபோபநிடதத்தில் இராமனைப்பூஜித்து அவர் திருவருளால் அவர்நாமத்தையுபதேசிக்கும் பெருமையை உருத்திரன் பெற்றதாகப்புலப்படவில்லையா? "யாம் கண்டுங்கேட்டுமுள்ள எல்லாவுலகத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித்தவன் நாராயண,,னென்று உபநிடதங்கள் நாராயணனை சர்வாந்திரியாமியாகக் கூறவில்லையா?

(மொழிபெயர்ப்பு)

இங்ஙனம்,
திருமலைசாஸ்திரி.

குறிப்பு.

ஐயா, திருமலைசாஸ்திரிகளே! உமது பத்திரிகை பட்சபாதத்தால் மறுக்கப்பட்டதாக எண்ணவேண்டாம். யாம்பன்முறை சைவர்களெழுதிய சிலகடிதங்களையும்கூட மறுத்திருக்கிறேம். அங்ஙனமிருக்க, இக்கடிதத்தைஒளிக்காமல்வெளியிட்டதற்குக் காரணங்கூறுதல் கடமையாயிற்று. எமது அபிப்பிராயம் எக்காலத்தும் எவரும் வைதிக சித்தாந்தத்தைக் கடக்கக்கூடாதென்பது. இவ் வேத நெறிதவறாது விவதிப்பீரேல், உம்மிடம் எமக்குபாதும் ஆக்ஷேபமில்லை. இனி எழுதுவது வைதிகவிரோதமின்றி யிருத்தல்வேண்டுமென்பது எமதுகொள்கை.

இந்துவுக்கும் பாதிரிக்கும் சம்பாஷணை

(முன்தொடர்பு)

இந்து. உங்கள்தேசத்தார், கிறிஸ்து மதஸ்தரானது நியாயத்தாலா? நம்பிக்கையாலா? அக்கிரமத்தாலா?

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பாதிரி. நம்பிக்கையால் தான்.

இந்து. நியாயமில்லாமல் நம்புவது விவேகமா? அ

பாதிரி. கடவுளிடம் நியாயம்பார்க்கப்படாது.

இந்து. கடவுள் அநியாயஸ்தரோ?

பாதிரி. அல்ல, அல்ல. நியாயஸ்தர் தான்.

இந்து. நியாயஸ்தரானல் அவரிடம் அநியாயம் ருக்குமா?

பாதிரி. எப்படிப்பேசினுலும் வாயை யடக்குகின்றீரே

இந்து. இயற்கையாக மூக்கில்லாதவன், பிறரையும் அ செய்யக் கருதி, வெட்டவெளியினின்று ப பொருளே! பாபநாசா! மூக்கை யிழந்தவை வா எனக்குப் பிரத்தியக்ஷமாக நீதரிசனந் தந் ன்றுநந்தக்கூத்தாடி, மற்றவரையும் மூக்கையறு கொண்டேவர, அவர்களும் இதனுண்மையை அ கொண்டு தாங்களும் பிறர் மூக்கை யறுக்கப் பிர ணப்படுவதற்கும் கிறிஸ்துப் பாதிரிகளுக்கும் தியாசமிருக்கின்றதா?

பாதிரி பாதிரிகள் உண்மையாய் உழைப்பவர்கள்; மூக்க ர்க்கும் பாதிரிகளுக்கும் ஒற்றுமை சொலலப்படா

இந்து. பாதிரிளும் பொய்யை மெய்போல் காட்டிப்பேசுகி ருர்கள்; மூக்கறையரும் அப்படித்தான் பேசுகின் ர்கள்.

பாதிரி. உபாத்தியாயரே! உமது மதசித்தாந்தம் ஆக்ஷேப களில்லாமலிருக்கின்றனவா?

இந்து. எனது மதத்திற்குஉம்மைக் கூப்பிடும்போது, உம சங்கைகளுக்கு சமாதானம் சொல்வேன். எனக்கு செலவுதாரும்.

பாதிரி. போய்வாரும்.

அறிஞர்களே!!

நான் பிறகு எனதிருப்பிடம் வந்துசேர்ந்தேன். அன்றுமு தல் என்னைக் கிறிஸ்துமதத்திற்கு அழைப்பதில்லை; எந்தபி ள்ளைகளையும் பலாத்காரம் செய்வதில்லை.

பாதிரிகள், வாயில்லாதவனை ஏய்க்கிருர்கள்; வாயுள்ளவ னைக்கண்டால் அடங்குகின்ருர்கள. பாதிரிகள் ஸ்கூல்களில் படிக்கவிடுவது பெருங் குற்றம்; அதிலும் பெண்மக்களை விடு வதுபெருங்குற்றம். அவர்கள் என்னேரமும் பிள்ளைகளின்பே ரில் வலைவீசிக்கொண்டேயிருக்கிருர்கள். அவர்களுக்குநல்லெ ண்ணமில்லை. அவர்கள், எதுமெய் மதம்? எதுபொய் மதம்?என் று ஆராய்ச்சி செய்வதில்லை. எப்படியாகுலும் பிறர் மதத்தைத் தூஷித்து, தம்மதமே மேலென்றுரைப்பது அவர்கள் சுபகுணம்

[illegible]

ஸாமநீதி [illegible]

—:(*):—

௮௮ [illegible]
௮௯ [illegible]
௯0 [illegible]
௯௧ [illegible]
௯௨ [illegible]
௯௩ [illegible]
௯௪ [illegible]
௮௫ [illegible]
௯௬ [illegible]
௯௭ [illegible]
௯௮ [illegible]
௯௯ [illegible]
௧00 [illegible]
௧0௧ [illegible]
௧0௨ [illegible]
௧0௩ [illegible]
௧0௪ [illegible]
௧0௫ [illegible]
௧0௬ [illegible]
௧0௭ [illegible]

தூண்டில் காரனுக்கும் கசாப்புக்காரனுக்கும் வேடனுக்கும் தன் தன் தொழில் மேலேயே கண்ணல்லாமல் நியாயா நியாயங்களிலாவது நன்மை தீமைகளிலாவது பாவ புண்ணியங்களிலாவது கண்ணில்லை.; அவ்வாறே பாதிரிகளுக்குப் பிறர் பெற்றெடுத்து வளர்த்த செல்வச்சிறுவர்களை அவர்கள் சித்தம் திடுக்கிட்டுக் கலக்க அபகரிப்பதே தொழிலன்றி மற்றொரு விதத்திலுமில்லை. ஆனால் தூண்டில் காரன் முதலானவர் உள்ளும் புறம்பும் ஒத்தவர்; பாதிரிகளோ புறத்தில் நல்லவர்கள் போல் காட்டுவார்கள்! இதுதான் வித்தியாசம். நிற்க;

நமது ஜனங்கள் குருட்டுத் தனமாய் அதில் விழுகின்றார்கள்; மதத்திற்காக அதில் செல்கின்றார்களில்லை. சிலமாட்டுப்பெருளுக் இச்சைவைத்தே செல்கின்றார்கள். யாது செய்வது? ஒவ்வொருவரும் தத்தம் மதத்தில் குற்றங்கண்டு குற்றமில்லாமதத்தில் செல்வத்தைப்பற்றி யாம்குறை யாதுங் கூறுகிலேம்.

சத்தியவாதி.

பாலநீதி

(முன்தொடர்ச்சி)

௮௮ மிதமீறுதலால் இதமாறுதலாம்.
௮௯ மீறிநடத்தல் மெத்தக்குறைச்சல்.
௯௰ முன்யோசனைசெயில் பின்வேதனையில.
௯௧ மூடர்முகத்திலும் மூகர்முகஞ்சுகம்.
௯௨ மெய்யேவெல்லும் பொய்கொல்லும்.
௯௩ மேனித்தநாக்கு மின்னல்மினுக்கு.
௯௪ மையல்கொண்டால் மகிமையகலும்.
௯௫ மொக்கைய கும் அக்கரைகுறைவால்.
௯௬ மோடியாய்நடந்தால் நாடுநகைக்கும்.
௯௭ மௌனவிருப்பு மௌட்டியமறைக்கும்.
௯௮ யத்தனஞ்செய்வதில் மெத்தனம்வேண்டாம்.
௯௯ யாசகவிருத்தியால் ஆசையைவையேல்.
௱ யுக்தமாக வுத்தரஞ்சொல்லு.
௱௧ யூஞ்சலுத்தி யோசிப்பதுநலம்.
௱௨ யோக்கியமுடையான் பாக்கியமுடையான்.
௱௩ லக்ஷம் வரினும் டக்ஷமறவேல்.
௱௪ யௌவனத்துடுக்குச் செவ்வளவுமிடங்கொடேல்.
௱௫ ரசத்திலும்ரசம் நற்போதகரசம்.
௱௬ லால்லனைசெயது பாலனுக்கோது.
௱௭ லிகிதநடைக்குறைவிகிதமுறை குறை.

ஞானாமிர்தம்

—o0:():0o—

கடந்த 'ஞானாமிர்தத்தில்,' யாம் எழுதியபடி 'தமிழ்,' என்னுஞ் சொல் ஓர்பாஷைக்குப் பெயராகுங்கால், வடமொழித்திரிபெனயாமெழுதியதை மறுத்ததுபோல சிலவரிகளை அப்பத்திராதிபர் வரைந்திருக்கின்றார். அவர் பலவழக்குகளைக் காட்டினபோதிலும், 'இனிமை,' என்கிற பொருள் அச்சொற் பெறுமெனச் சாதிப்பவருக்கு இதுசமாதானமேயன்றி வேறுபொருளாதரும்பொழுது அச்சொல் மற்றொன்றின்றிரிபு எனும் எமது வாதம் இதனால் மறுக்கப்படா. அவரும் தமிழில் வடமொழிச் சொற்கள் அநேகமுண்டென்றார். யாமும் அவர்கூறியபடியே அப்பதத்திற்குப்பொருளு உண்டென்றும் தமிழ் பாஷைக்கினித்த வினிச்சொற்கள் உண்டென்றும் ஒப்பினோம், ஆதலால் இவ்விவாதத்தில் அதிசூக்ஷமாய் இனிச்சொல்லுக்கு மூலம், அதன் ஆற்றல், அவற்றையறியும் வழி, அவற்றுள் வேற்றுமை, அவற்றினிலக்கணமுதலியவற்றையெடுத்து விரித்து எமதுவழியை யாம் நிலைநாட்டுவோம். அவர்களும் அவ்வழிபற்றி நீடித்தெழுதின் இதன் பொருளையறிக்காணுத்திருத்துச்சித்தாந்தத்தைத் தெற்றெனக்கொண்டு நடுநிலைமையாய் மத்தியஸ்தஞ்செய்யத்தக்கவரான உபயபாஷாபண்டிதர்கள் அகப்படுவதரிது. ஆதலால் எமது விவாதம் நீடிக்காது. அதுகொண்டே யாமிருவரும் ஒருவருக்கொருவர் விவாதஞ்செய்ய உத்தேசியாமல் இடையிற்றோன்றிய இவ்விவாதத்தை இம்மட்டில் நிறுத்தினோம். இதனால் யாம் கொண்ட கொள்கை வலிமையாகாது. எமது பத்திரிகாநண்பர்கள் இவ்விவாதத்திற்கிடந்தருவரேல் யாம் அதைத்தொட்டு நீளவரைவோம். இனி இக்காலத்திலும் பொதுஜன க்ஷேமவிருத்திக்கு விரோதமாய் உட்சண்டைகளைக் கிளப்பி வெளிவந்து தனக்கென ஓர் சித்தாந்தமுமில்லாமல் "இந்துஜநபூஷணி,, என்னும் பத்திரிகையில் வெளிவந்த சைவசித்தாந்தியைப் போல் எமக்குப் குணத்தைக்குற்றமாகக் கொள்ள வேண்டுமென்கிற எண்ணமில்லை. பாருங்கள்! இவர் சென்னை வேதாந்த விசாரணை சபையார்வெளியிட்ட "கிறிஸ்தவரைக்கேட்கும் வினாக்கள்,, என்னும் துண்டுப்பத்திரிகையையும், அதற்குக்கிறிஸ்தவரளித்த மறுப்பையும் சென்னை இந்து ட்ராக்டு சொஸைட்டியார் வெளியிட்டதாகத் தமோட்டங்கொண்டு; அச்சங்கத்தார் பொதுமதத்தவரல்லரென்றும் அவரை அநுசரிப்பது ஞானாமிர்தத்திற்குக் குறைவென்றும் எழுதினர். மேலும் "சைவர், வைதிகரில் சேர்ந்தவர்,, என்று ஞானாமிர்தத்திலிருப்பதை மறுத்தார்; "இனி இவர் ஒருக்கால் சைவர்களை வைதிகரல்லவென்று எண்ணினும் அவர்களை வைதிகரென்றே யாம்கூறுவோம். அவர் எழுதிய விஷயங்களை மறுத்தல் எமக்கவசியமன்று; எங்கள் மட்டில் வேண்டியதைக் காட்டினோம். அநேகநல்விஷயங்கள் நிறைந்த நமது ஞானாமிர்தம் நீடூழிவாழ்க.

(வரும்)

ப்ரம்மவித்தியா பத்திராதிபரவர்களுக்கு வந்தனந்தந்தனம்.

தங்கள்பத்திரிகை ஒவ்வொன்றிலும் கிறிஸ்துமத பிரசங்கர்கள் நம்மவர் கொள்கைகளைத் தூஷணைசெய்வதையும் நம்மவர் அதற்குப் பிரதிசெய்வதையும் படிக்குங்கால் மிகுந்தஆச்சரியமுண்டாகின்றது. எங்ஙனமெனில், கிறிஸ்தவர் தமது அவிவேகத்தினால் நம்மவரை தூஷிக்கின்றனர். நமது வேதபுராண சாஸ்திரங்களின் உட்பொருளையறிதல் கல்விகேள்விகளிற் சிறந்த எத்தன்மைத்தவருக்கும் மகா அருமை; அவற்றினுண்மையையறிதற்குச் சகலத்திலும் சிறந்ததும் நிச்சயமானதுமானவழி பக்தி ஒன்றே. ஜகதீசன சர்வவியாபகனாகவும் தனக்கென்று ஓர் ஸ்வரூபமாவது குணமாவது இல்லாமல பக்தர்கள் எவ்வெவ்விதமாக பாவனைசெய்து பக்தி வைக்கின்றனரோ, அவ்வவ்விதமாகவே அமைந்து திருவிளையாடல் செய்பவனாகவிருப்பதால், அங்ஙனங்கொள்ளும் பக்தமானது ஆராய்ச்சசெய்து விவேகத்தோடுங் கூடினதாயிருக்கினும் ஆராய்ச்சிசெய்யாது அவிவேகத்தோடுங் கூடினதாயிருக்கினும் பலன் தாத்தக்கதே; எங்ஙனமெனில், கரும்பை அரிந்து தின்றாலும் அரியாது தின்றாலும் அதன் சுவை பேதப்படுவதில்லை. அவ்வித பக்தியானது தன சுய ஞானத்தினால் கொண்டதாயிருப்பினுங் குருமுகமாய்க் கொண்டதாயிருப்பது விசேஷம்; ஏனெனில், ஒவ்வொருவருக்குப் ஞானமானதுஓர் அளவில் அடங்காது அபாரமாயிருப்பதினால் இவ்வளவில் நில்லெனக் காட்டுங் குருஉபதேசம் அதிபவச்யமாயிருக்கிறது. அவ்வண்ணங்குருஉபதேசம் ஆதாரமாகக்கொள்ளாநின்ற பக்தியொடும் நமதுவேத புராணங்களை பாராயணஞ்செய்பவர் அவிவேகாந்தகாரத்தைப் போக்கி விவேகபிரகாசத்தை கொள்கின்றனர். நமது வேத புராண சாஸ்திரங்கள் சிருஷ்டி, ஸ்திதி, லயாதி முத்தொழிலையும் தெளிவுறக் காட்டுந்தன்மையனவாகவும், எங்ஙனம் ஜகதீசன் அவரவர் பாவப்படி அவரவருக்கமைந்து அநுக்கிரகஞ்செய்கின்றானோ அங்ஙனமே எவரெவர் எவ்வெவ்வித மார்க்கத்தை அநுசரித்து ஆராய்ச்சி செய்கின்றனரோ அவரவருக்கவ்வவ்விதத்தில் தெளிவைக் கொடுப்பனவாகவுமிருக்கின்றனவென்று அறிஞருரைத்திருக்கின்றனர்; சம்சயிப்பவர் அநுபோகபூர்வமாய் அறிந்துகொள்ளலாம். கிறிஸ்தவரது பைபிலோ! அங்ஙனமன்று; ஆராய்ச்சியின்கண் புகுந்தோருக்கு பண்டைக்காலத்து வயோதிகர்கள் இரவில் சிறுவர் நித்திரை கொள்ளற்பொருட்டு சொல்லும் வேடிக்கைகதைபோலாகும்; அவிவேகத்தைப்போக்கி விவேகத்தை உண்டாக்குந்தன்மையதன்று; ஆயினும் நம்பினோருக்கு பக்திசகிடமுண்டு; ஆகவே நமது வேதாகமங்கட்கும் அவரது பைபிலுக்குமுள்ள பேதமாவதியாதெனின் நமதுவேதாகமம் ஞானபக்தியையும் அவரதுபைபில் மூடபக்தியையுமுண்டாக்குங்குணமுள்ளனவாயிருப்பதே; கிறிஸ்தவர் நம்மவரைத் தூஷிப்பது அவரது குறையன்று; அவரது பைபிலின் குறையாகும். அஃது அவர்கட்கு நல்ல ஞானத்தை உண்டாக்கியிருக்குமேல் ஏன அவர் நம்மை தூஷிப்பார்? அவிவேகிகள் விவேகிகளை அறியாது தூஷிப்பதியல்பு; விவேகிகளங்ஙனஞ்செய்யார்; அங்ஙனமிருக்க, நம்மவரும் அவர்களை ஓர் பொருட்டாகக்கொண்டு அவர்கள் பாட்டைப்பாடுவதென்னே

இதுவேயெனக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது; பக்தியே முக்திக்கு முதற் காரணமாயிருக்கின்றது; அகண்டபரிபூரண சச்சிதாநந்த நித்திய நிர்மல நிர்ஸ்வரூப ஸ்வயம்பிரகாசமாய் விளக்கும் பரப்பிரம்மத்தை தாகிப்பவன் தடாகத்தில் அளவற்றஜலமிருக்கினும் தன்தாகத்தை தீர்க்குமளவு எடுத்துண்டு விடாய் தீர்வதுபோல, ஆன்மாக்கள் தாம் விசுவாசங் கொள்ளும் சுருதிஸமிருதிக்கேற்ப அளவுபடுத்தி ஸ்மரித்தல் தகுதியென யாவருமறிந்திருக்கின்றார்கள்; நமது புராணாதிகளுக்காசிரியரான மஹான்கள் நிர்குணியான ப்ரம்மத்தை அறிந்து சகுணியாக பாவஞ்செய்து ஸ்ரீராம கிருஷ்ணபகவானென்றும் சுப்ரமண்யமென்றும் நாமகரணங்களிட்டு ஆன்மாவுக்கும் சரீரத்திற்கும் உளதாய சம்பந்தா சம்பந்தங்களை விளக்கிக்காட்டியிருக்கின்றனர்; அம்மஹான்கள், அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் பிண்டத்திலுள்ளது அண்டத்திலும் உண்டெனவும் நிச்சயத்தை பிரத்தியக்ஷமாக சரியை, கிரியை, யோகம், ஞானமென்பனவற்றால அறிந்து சர்வேசுவரன் கடங்கடோறும் வெளியிடங்கடோறும் செய்யுந்திருவிளையாடலைக் கதைகளாக வெடுத்துக்காட்டியிருக்கின்றனர்; பின்னும் ஜகதீசனுடைய திருவிளையாடலுக்கு அளவுசொல்லுவாரெவருமில்லை; சர்வஜீவகாருண்ணியனுயிரானின்ற பகவான் இந்த ஹிந்துதேசத்தின்கண் மாத்திரமே அநேக அவதாரங்களெடுத்தும் அங்ஙனமே கடங்கள்தோறும் நின்று ஸ்காந்தம், இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய புராண இதிகாசங்களில் வரைந்திராமாறு திருவிளையாடல் செய்திருக்கின்றான்; பூகோளத்தின்கண்ணுளதாய ஏனைய ஸ்தலங்களில் அங்ஙனஞ்செய்திலன்; என்றுயாவர் சொல்லக்கூடும்? ஹே அறிஞர்காள்!! விசாரித்துப்பாருமின்; அந்த பகவான் இங்குசெய்ததுபோலவே ஆங்காங்கும் அவரவர்கள் சுபாவத்திற்கும் குணாகுணங்களுக்கும் அறிவுக்குத்தக்கவாறு ஏன் திருவிளையாடல் செய்திருக்கமாட்டான்? ஏன் நாசரேத், எருசலேம் முதலானவிடங்களில் பாமரர்கட்கு அறிவூட்டும்பொருட்டு தானே குருவாக அவதரித்து ஏசுகிறிஸ்து என்று நாமங்கொண்டு திருவிளையாடல் செய்து அத்திருவிளையாடலை அவ்விடத்திலுள்ளவர்கள் தங்கள் சொற்பகல்விக்கும் யூகத்திற்குத் தக்கபடி புராணமாக எழுதி வைத்திருந்தாலாகாதோ? நாம், ராம ராம கிருஷ்ண கிருஷ்ண என்று பஜிப்பதுபோல அவர்களும் கிறிஸ்து கிறிஸ்து என்று ஏன் பஜிக்கக்கூடாது? பகவான் லோக சம்ரக்ஷணார்த்தமாக அநேக அவதாரங்கள் எடுத்திருப்பதாக ஒவ்வொரு புத்தகங்களுஞ்சொல்லுகின்றன. அங்ஙனமிருக்க கிறிஸ்து மனிதன் என்றும், அடி உதை பட்டவனென்றும், பகவத் அவதாரமல்லனென்றும் வாய்கூசாது பேசுவது நாமே நமது வேதாகமங்களின் மகிமையைக்குறைத்துக்கொள்ளுவர்களாகிறோம். தூஷிப்பவரை திருப்பிதூஷியாது நிச்சயத்தை அறிந்து சாந்தகுணத்தை வகிப்பவரன்றோ சாதுக்களெனப்படுவார். நம்மவர் ஜீவகாருண்ய முள்ளவராயின், நம்மைத்தூஷிக்கும் அந்த அவிவேகிகளுக்கு விவேகமுண்டாகும்பொருட்டும். நல்ல பக்தியுண்டாதற்பொருட்டும், அவர்கள் பைபிளிலுள்ளதையே அவர்கள் அறியாதிருப்பதைவிளக்கிக்காட்டி, எவ்விதத்திலாவது பக்தியைப்பிரதானமாகக்கொள்ளுங்களென உபதேசஞ்செய்து நமது புராண இதிகாசங்களின் தத்துவக்கியானத்தைப் போதிப்பது தருமம். பதில்தூஷணை செய்தல் தர்ம விரோதமென்றறிந்தொழுகுதல்வேண்டுமென்றறிக.

ஹே! பத்திராதிபரவர்களே! மேற்சொன்னவாறு அவிவேகிகட்கு விவேகமுண்டாதற்பொருட்டு செய்யற்பாலனவான அநேக வழிகளில் ஓர்வழியென் அற்ப அறிவிற்கு உசிதமாகத் தோன்றுகின்றது. பெரியோர்கட்கு வேறாகத்தோன்றுமாயின் என்மேரில் கிருபை பாலித்து என் குற்றத்தைக்ஷமித்து அப்பால் உசிதமானதின்னதென்றறிவூட்டுவாரென விசுவாசிக்கலாயினேன். நாநாபுராணங்களையெடுத்துக்கூறும் தங்கள்பத்திரிகையில் தத்காலத்தில் இராமாயணத்தையெடுத்துப் பேசுகின்றீர்கள். இந்த ராமாயணமானது யோகசாத்திரமென்னவும் தபோநிதிகள் சரீரத்திலடைந்து பிரியமளவுஞ்செய்யுங் கூத்தென்வும் பெரியோரால்கேள்வியுற்றிருக்கிறேன். ஆதலால் தாங்கள் அஃதெவ்விதமங்ஙனமாகுமென்பதையும், அல்லது அஃது சாதாரணமேயாகுமென்பதையும் விளக்கிக்காட்டும்படி மிகவினயமாய்க்கோரலாயினேன். இன்னுமிதனைப்பார்க்கும் ஏனையவறிஞர்களும் என் சந்தேகத்தை நிவர்த்திசெய்யக்கருணைகொள்வாரென பூரண நம்பிக்கையோடுங்கூடிய சாதகபக்ஷி மழைத்துளியை எதிர்பார்ப்பதுபோல எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஓம் சரவணபவ

ஹரிஹரபக்தன்

கடிதர்கவனிப்பு

I- கடிதக்காரர்கள் எழுதப்புகுந்த விஷயங்களை நல்லவெண்மையாகிய காகிதத்தின் ஒரேபுறத்தில் கறுத்தமசியுடன் வரிகள் ஒன்றக்கொன்று நெருங்காமலும், அட்சரங்கள் தனித் தனியே புலப்படும்படி திருத்தமாயெழுதல்வேண்டும்.

2- படிப்பவர்களுக்கு அறிவையும் மகிழ்ச்சியையும் வியப்பையுந்தரத்தக்க நற்பொருள்களையே அமைத்தெழுதல்வேண்டும்.

3- பயனில்லாத சொற்றொடர்களையும் நிந்தித்தல் நிறைந்த வாக்கியங்களையும் கடிதத்தில் எழுதலாகாது.

4- பொருளை நன்றாய் விளக்கும்படி வாக்கியங்களை இயன்றமட்டும் சுருக்கி எழுதல்வேண்டும்.

5- கடிதக்காரர்கள் தத்தம் உண்மையான ஊர் பெயர் விலாசம் முதலியவைகளை பத்திரிகாசாரியருக்கு மாத்திரம் விளக்கும்படி கடிதத்தின் கீழ்புறத்தில் வரையவேண்டும்.

6- பத்திரிகையில் பிரசுரிக்கத் தகாததாககாணப்படுகிற கடிதங்கள், கடிதர்களுக்குத் திருப்பியனுப்பப்படா. காரணமுங்கிடைக்காது; கடிதங்களிலுள்ள கடுஞ்சொற்களும் தீப்பொருள்களும் நீக்கப்படும். அந்தரங்க கடிதக்காரர் பெயர் எவ்விதத்திலுங் காக்கப்படும். கடிதர்களின் அபிப்பிராயங்கள் பத்திரிகாசிரியரைச் சாரமாட்டா.

இதுவும் தலைவிதிதான்:—

நம்முடைய இந்துமதப் பிரசங்கிகளில் ஒரு மகாபுருஷர் கெடுநாளாய் நம்முடைய மதத்திலிருக்கிறவைகளை என்றுந்தெரியாத பேதமையானவர்களுக்கு எடுத்துரைத்து, இவ்விந்துமதம் எல்லா மதங்களைக்காட்டிலும் மிகசிலாக்கியமென்று அநேகவிதமான நம்முடைய சாஸ்திரங்களைஎடுத்துக்காட்டி ரூபித்தும், கிறிஸ்து மதக்கொள்கையிலுள்ள சாஸ்திரங்களை எடுத்துக்காட்டி அதில் இன்னின்ன கெடுதல்களிருக்கிறதினால் நம்முடைய மதமாகிற இந்துமதமே எல்லவர்றிற்கும் சிலாக்கியமானதென்று உபந்நியாசித்தும் வந்தார்களாம். அதற்காக அங்குள்ள ஒரு அமெரிக்கன் மிஷனரி போதகா அம மதுரைஜில்லா போலீஸ் சூபிரின்டென்டுக்கு 'இவ்விந்து உபந்நியாசகரை எந்தவிதத்திலும் பிடித்து குற்றஞ்சாட்டி தண்டித்து விடவேணும்' என்று எழுதினாராம. அந்தச் சூபிரின்டென்டுக்கு அப்போதகருடைய ஜாதியதக் கொள்கையை அனுசரிப்பவராகையால், அக்கடிதத்தைப்பார்த்து உடனே அந்தடிவிஷன் போலீஸ் இனிஸ்பெக்டருக்கு ஒருகடிதம் இவ்விந்துபிரசங்கியை எவ்விதத்திலும பிடித்துவைக்கும்படி எழுதினாராம்; அவர் உடனே இப்பிரசங்கியை கலகம் உண்டுபண்ணினவரென்று பிடித்துவைத்துவிசாரணைக்குக் கொண்டுவந்திருக்கிறாராம்; ஷெ போலீஸ்சூபரின்டென்டு அந்த அமெரிககன் மிஷன் பாதிரியின் சீடராயிருந்தாலும் எப்படித்தான் அந்த இனிஸ்பெக்டருக்கு ஷெ தருமகுணசீலரை பிடித்துக குற்றப்படுத்தும்படி எழுதினரோ அது வியக்கத்தக்கதே! அவர்தான் தனகுருவின் பேச்சைத் தள்ளாமல் எழுதினாலும், இந்த இனிஸ்பெக்டரும் அதற்கு இணங்கி அப்படியே செய்துவிட்டாரே! இதற்கே இவர்கள் இப்படியிருந்தால், இன்னுங் குற்றவாளிகள் விஷயத்தில் எப்படியிருக்கிறார்களோதெரியவில்லை!! இது எதைக்காட்டுகிறதென்றால், ஷெ சூபரின்டென்டும் இனிஸ்பெக்டரும்இன்னும்பெரியவேலைகளில் இருந்தால், 'எல்லா இந்துக்களையும கிறிஸ்தவராக்கி விடுவோம்' என்ற குறையைக்காட்டுகிறது; பாதிரிகளுக்கு உற்சாகத்தினை ஊட்டி நமமதத்தைக் கண்டபடி தூஷித்து வழியில் வருவார் போவாரை வலியப்பிடித்து கிறிஸ்தவராக்க இடங்கருகிறது; ஆகையால், ஓ! மதுரையிலுள்ள மடாதிபதிகளே! மதாபிமானிகளே! கனவான்களே; தனவான்களே! இன்னும் மற்றுமுள்ளவர்களே! இந்தபோக்கிரிகளாகிய போலீஸருக்குப்பயந்து பின் வாங்காதேயுங்கள்! உங்களால் கூடியவரையில் பிரயாசைப்பட்டு மேற்படி இந்துபோதகரை யாதொரு தீங்குக்கும் உள்ளாக்காதபடி விடுவித்து மறுநாள் நம்மதத்தைப்பற்றிப் பிரசங்கிக்கத் தூண்டுங்கள்; பயப்படாதீர்கள்.

அந்தச் சூபரின்டென்டு இன்ஸ்பெக்டர் இவர்களுடையகெட்ட நடத்தையைப் பற்றி போலீஸ் டிபார்ட்மெண்டின் தலைவருக்கு உடனே யாவரும் ஒருமுகமாய் நின்று மகஜர் அனுப்புங்கள். அப்பொழுது தெரியும் இவர்கள் திண்டாட்டம். சென்னையிலும்' இன்னும் மற்ற இடங்களிலுமுள்ள இந்து டிராக்ட் ஸொஸைட்டியாரே! உங்கள் நோக்கம் கீழே விழாதபடி இப்பேர்ப்பட்ட துர் எண்ணம் உடைய பாதிரிகளின் முன் நீங்கள் ஓங்கித் தழைத்து இத்தீயோரை ஓட்டமுயலுவீர்களென வேண்டிக்கொள்கிறேன்.

சு. பி.

பசியாதவன்:— அமெரிக்காவில் டாக்டர் டர்னர் என்ற பசியாமனுஷன ஒருவரிருக்கிறான் ஏசுகிறிஸ்து அவர்கள் அநேக நாள் விடாமல்பட்டினியிருந்தால் அவர்தெய்வமாயிருக்கவேண்டுமென்றும், மனிதனால் அப்படியிருக்கமுடியாதென்றும், கிறிஸ்தவர்கள் கொண்ட அபிப்பிராயத்தைநீக்குவதற்காக அமெரிக்காவில் தண்ணீரைத்தவிர ஒன்றுங்குடியாமலும் புசியாமலும் 80 நாள் கழித்தார். ஆகையால் இவருக்குப் பசியாமனுஷனென்று சிலர் பெயரளித்திருக்கிறார்கள். இவர் தன்னுடைய வீட்டில 40- குழந்தைகள் வரையில் வளர்க்கப் போகிறார். அக்குழந்தைகளுக்கு மாமிசமுதலிய அசுத்த வஸ்துக்கள் புசிக்கக்கொடாமல் ஒருநாளுக்கு ஒருவேளை உணவு கொடுத்துவளர்க்க யோசித்திருக்கிறார். இப்போது இவ்வுலகில் எல்லாஜனங்களும் நாள் ஒன்றுக்கு மூன்று தடவையும், ஐந்து தடவையும் சாப்பிடுகிறதெல்லாம் தேகத்திற்குக் கெடுதலை விளைவிக்குமென்றும், அப்படிச் செய்கிறதால்தான் ஜனங்களெல்லாம் கொழுப்படைந்து அடாதகாரியங்களைச் செய்கிறார்களென்றும் சொல்லுகிறார்கள். இதுவும் ஏசுகிறிஸ்துவின் மகிமையேயன்றி வேறல்ல.

கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு.

1817-௵ மார்ச்சுமீ௴த்தில் சென்னை "வேதாந்த விசாரணசபையார்" உலகமும் ஆத்துமாவும் சத்தா? அசத்தா? சதசத்தா? என்னும் வினாக்களைச் சிறு பத்திர வாயிலாகக் கிறிஸ்தவரைக் கேட்டார்கள். அவ் வினாக்களுக்கு விடை பைபிலின்கண் ஆதாரமில்லாதிருந்தும் நான்கு கிறிஸ்தவர், தனித்தனியே பொருத்தமில்லாத விடையளித்தார்கள். அதனுபாசம் வெளிப்படும்பொருட்டும், உண்மையை யாவரும் உணர்தற்பொருட்டும் ஓர் சம்ஸ்கிருதபண்டிதர்" ஷெவிடைகளைக் கண்டித்து, "கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு" என்னும் புத்தகமொன்று ஒன்பது பாரத்தில் அச்சிட்டிருக்கின்றார். சமய ஆராய்ச்சிசெய்யும் யாவரும் அதை வாங்கிவாசிக்கவேண்டியதே. விலையும் சொற்பம்; காகிதமோ உயர்ந்தது. வேண்டியவர், சென்னை முத்தியாலுபேட்டை தம்புசெட்டிவீதி 316-நெ. மதராஸ் ரிப்பன் பிரஸில் ம-௱-௱- ஸ்ரீசை. ர. நமசிவாயசெட்டியாரிடத்திலும், சிதம்பரம் ப்ரம்மவித்தியாபத்திராதிபர் ப்ரம்மஸ்ரீ ரு. சீநிவாசசாஸ்திரியாரிடத்திலும் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை அணு 2. தபாற்கூலி பை 6.

நம்பத்திரிகா நேயர்காள்!!

இம்மதி தொடங்கி எமது ப்ரம்மவித்தியாபத்திரிகை மாதமிருமுறை சுழன்று வருவதால், இதுகாறும் பாக்கி யுள்ளவர்கள் தங்கள் சந்தாத்துகைகளை பாக்கியின்றியனுப்பி இனி முன்பணமாகவே கட்டிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள கேட்டுக்கொளுகிறேன். முன்பணமனுப்பாதவர்கட்கு பத்திரிகை அனுப்பப்படாது. கையொப்பத் தொகை வசூல்செய்யும் பொருட்டு வாசுதேவசாஸ்திரி என்பவரை வெளியில் பலவிடங்களுக்குமனுப்பியிருக்கிறோம்; தம்மால்சேரவேண்டிய சந்தாத் துகைகளை அவரிடம் செலுத்தி பில்பெற்றுக்கொள்ள யாதுந் தடையிலது.

ப்ரம்மவித்தியா யந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்ட அப்பய்யதீக்ஷிதரவர்களுடைய கிரந்தங்களின் விளம்பரம்

	விலை.		
சிவதத்துவவிவேகம்	2	0	0
மத்வமதவித்வம்சனம்.	0	12	0
ப்ரம்மதர்க்கஸ்தவம்-	0	8	0
ஆதித்தியஸ்தோத்திரரத்தினம்-	0	4	0
சிவமஹிமகலிகாஸ்துதி-	0	7	0
சிவத்தியானபத்ததி-	0	1	0
இராமாயணதாற்பரியசங்கிரகம்-	0	2	0
பாரததாற்பரியசங்கிரகம்-	0	2	0
சித்தாந்தலேசசங்கிரகம்-	1	0	0

பட்டஸ்ரீ நாராயணசாஸ்திரிகளியற்றிய தண்டகங்களும் நாடகங்களும்

சூரமயூரநாடகம்	0	6	0
ஜைத்ரஜைவாதிருகம்-	0	6	0
சர்மிஷ்டாவிஜயம்-	0	6	0
மகேசுவரதண்டகம்-	0	1	0
ஆரியாதண்டகம் லக்ஷ்மிஸ்தோத்திரம்-	0	1	0
சாமருக்ஸம்ஹிதாபாஷ்யம்-	0	8	0

இஃது மகாமகோபாத்தியாய இராஜுசாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்டது.

சௌமியசோம நாடகம்-	0	5	0

இந்நாடகம் ப்ரம்மவித்தியா பத்திராதிபர் ஸ்ரீ சிவாசசாஸ்திரிகளா லியற்றப்பட்டது

கீர்த்திகீர்த்தனை.	0	1	6
விசாகதுலாபாரப்பிரபந்தம்-	0	1	6

போதாரியா—இது ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளருளிச்செய்த ஓர் வேதாந்தப்பிரகரணம். விலை அணா க.

முதகலாரியா:—இது முத்கல பட்டரியற்றிய ஒருஇனியஇராமஸ்தோத்திரம். விலை அணா ௨-

நந்திகேசுவர காசிகா:—இது வியாகரணசாஸ்திர மூலசூத்திரங்களாய சச- சூத்திரங்களுக்குரை. விலை அணா க-

ஆனமாவும் சரீரமும்:— இது நாஸ்திகர் செய்விதனுக்குவிடை. விலை அணா க-

ஸ்ரீராமபத்திரவிஜயம்	,,	அ	,,
பிரஸன்னராகவராமாயணம்	,,	௫	,,
தோத்திர சங்கிரகம்	,,	௨	,,
இராமாயணவினாவிடை	,,	௬	,,
சிதம்பரமாஹாத்மியம்	,,	அ	,,
துதிசங்கிரகம்	,,	க	,,
விசாகநட்சத்திரமாலிகை	,,	,,	சா
சீகாழித்தலபுராணம்	,,	அ	,,
வேளூர்ப்புராணம்	,,	சா	,,
கந்தபுராணநவநீதம்	,,	௪௨	,,
பஞ்சதசோபநிஷத்து	க	௨	,,
அஷ்டாங்கயோகம்	,,	௫	,,
மனுமுறைகண்டவாசகம்	,,	௬	,,
கிறிஸ்துமதகண்டனம்	,,	க	,,
யேசுக்கிறிஸ்து மனிதனே	,,	,,	சா

அறிவிப்பு

சர்வதாரி௵ருஷத்து ரிப்பன் தமிழ்ப்பாக்கெட் பஞ்சாங்கம்- தயாராயிருக்கிறது.

புத்தகம் 1-இ விலை அணா 6. தபால்பாகிசார்ஜ் அணா 1. 10இ ஒன்றும் 25 இ 3. ம் 50 இ 7. ம் 100இ 15 ம். அதிகமாகக்கொடுக்கப்படும்.

இங்ஙனம்

சை இரத்தினசெட்டியார்.

புரோப்ரயிட்டர்

மதராஸ் ரிப்பன் பிரெஸ்

316. தம்புசெட்டிவீதி

சென்னை.

இந்து டிராக்ட் ஸொஸைட்டி

இந்த இந்துசங்கம் கலியுகாதி சகூஅகூ-வது சர்வஜித்து௵ சித்திரைமாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

இச்சங்கத்தின் முக்கிய கருத்துகள்:—

(1) இந்துமதத்தைப் பரவச்செய்தல்; அதன் விரோதிகளை கண்டித்து அதைப் பாதுகாத்தல். (2) இந்து மகாஜனங்களுடைய யோகக்ஷேமத்திற்காகப் பாடுபடுதல். (3) நீதிமார்க்கங்களையும், கல்விவிஷயங்களையும் ஆதரித்து அபிவிருத்திசெய்தல் சுதேச பாஷைகளிலும் இங்கிலீஷிலும் சிறு பத்திரிகை புத்தகம் இவற்றைப் பரவச்செய்தும், பிரசங்க உபந்நியாசம் புரிவித்தும், வாதம் செய்வித்தும் மேற்படி கருத்துகள் நிறைவேற்றப்படும்.

இச்சங்கத்துக்கு ௵ 1-இ சந்தா குறைந்தது ரூபா 1—4—0

(இது முன்பணமாகக் கட்டவேண்டியது.)

அக்கிராசனாதிபதி:— ப்ரம்மஸ்ரீ, ம-ா-ா-ஸ்ரீ ஆர். சிவசங்கரபண்டியா அவர்கள், பி-ஏ. எப்-டி-எஸ்

காரியதரிசி:—ப்ரம்மஸ்ரீ ம-ா-ா-ஸ்ரீ, தீ. வி. பெரியசாமி ஐயரவர்கள்

சுதேசமதாபிமானிகளான இந்துக்கள் யாவரும் இந்த மதசங்கத்திற்குத் திரவியசகாயம் செய்யப் பிரார்த்திக்கப்படுகின்றார்கள். இச்சங்கத்தில் சேர்ந்தவர்கள், சென்னை முத்தியாலுப்பேட்டை தம்புசெட்டிவீதியில் இந்துடிராக்ட்ஸொஸைட்டியின் காரியதரிசியவர்கள் பேருக்குத் தபால்சார்ஜுக்காக அரையணாத் தலை அனுப்பினால், ஷை அக்கிராசனாதிபதி அவர்களால் இயற்றப்பட்ட இந்துமத வினாவிடையென்னும் புத்தகத்தை யினாமாகப் பெறுவார்கள். இச்சங்கத்தைப்பற்றி இன்னும் யாதேனும் கேட்கவிரும்புவோர், காரியதரிசியவர்களுக்கு எழுதிக்கொள்ளவேண்டியது.

Printed and Published for the Proprietor at the Brahmavidya Press CHITAMBARAM.